**புதுச்சேரி அரசு**

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை**

**செய்தி குறிப்பு** 31 MAR 2020

புதுச்சேரி அரசு, கொரோனா நோய் நம் மாநிலத்தில் பரவாமல் இருக்க பல கட்டங்களாக பல நடவடிக்கைகள் சிறப்பாக எடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஊரடங்கு உத்தரவு அமலில் இருக்கும் இத்தருணத்தில், வெளிமாநிலத்தை சேர்ந்தவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல முடியாமல் புதுச்சேரியில் இருக்கின்றார்கள். அவர்களில் பெரும்பாலானோர் பல தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களாகும், அவர்களுக்கு அந்த அந்த தொழிற்சாலைலிலே தங்கும் இடம், உணவு மற்றும் மருத்துவ வசதி ஆகியவற்றை செய்து தரவேண்டும் என்று தொழிற்சாலை நிர்வாகத்தை அறிவுறுத்தப்பட்டுள்ளது, இதில் ஏற்படும் சிறுசிறு குறைபாடுகளும் அவ்வப்போது நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்த ஊரடங்கு உத்தரவின் காரணமாக வீடற்று தெருவோரம் வசிப்பவர்களுக்கும் வெளியூரை சேர்ந்தவர்கள் இங்கு உணவின்றி தவிப்பவர்களுக்கும் உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அதைப்போல புதுச்சேரியைச் சேர்ந்த மக்கள் சுற்றுலா, தொழில் அல்லது வேறு ஏதோ சொந்த காரணங்களுக்காக வெளியூர் சென்றவர்கள் ஊரடங்கு உத்தரவின் காரணமாக புதுச்சேரிக்கு வர இயலவில்லை. அதில் சிலர் தங்கள் கஷ்டத்தை கூறி புதுச்சேரிக்கு வர உதவி கேட்டுக்கொண்டு இருக்கின்றனர். இது தொடர்பாக இன்று வரை 200 தொலைபேசி அழைப்புகள் பெறப்பட்டுள்ளது. ஊரடங்கு உத்தரவின் காரணமாக அவர்கள் புதுச்சேரிக்கு வந்து சேர இயலாது என்பது நன்கு தெரிந்ததே. இருந்தும் அவர்கள் ஏதோ ஒரு வழியில் புதுச்சேரிக்கு வந்தால் அவர்கள் நோய் பரப்பும் காரணியாக இருக்க அதிக வாய்ப்பு இருக்கிறது. எனவே அவர்கள் தற்போது இருக்கும் இடத்திலேயே இருக்குமாறும், அருகில் உள்ள அரசு அதிகாரிகளை அல்லது அரசு அலுவலகங்களை அணுகி தக்க உதவி பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் புதுச்சேரியைச் சேர்ந்தவர்கள் அல்லது அவர்களின் நண்பர்கள் இவ்வலுவலகத்தை அணுகும்போது வெளிமாநிலத்தில் இருப்பவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு அந்த மாநிலத்திற்கு விபரங்கள் அனுப்பப்பட்டு அவர்களுக்கு இருப்பிடம், உணவு, மருத்துவ வசதிகளுடன் உதவி அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு கேரளா மற்றும் ஜம்மு-காஷ்மீர் அரசு அதிகாரிகள் நம் புதுச்சேரி மக்களை தாங்கள் பார்த்துக் கொள்வதாகவும் நலமாக இருப்பதாகவும் என்று மின்னஞ்சல் மூலம் பதில் அளித்துள்ளார்கள். எனவே மக்கள் எவரும் இது தொடர்பாக எந்த அச்சமும் படாமல் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவண்

T. அருண், இ. ஆ. ப.,

அரசு செயலர் மற்றும் மாவட்ட ஆட்சியர்,

புதுச்சேரி அரசு